DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the court Judicial Magistrate At Oddanchatram
Case No : DVOP 10/2023
Petitioner Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | செல்வசிந்து | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act
Examination Date / சாட்சி விசாரணை தேதி :–15/07/2026

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:

1) என்னிடம் காட்டப்படும் புகாரானது கடந்த 08.02.2023 ஆம் தேதி என்னால் ஒட்டன்சத்திரம் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் என்றால் சரிதான். **புகார் மனு எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் மேலே குறிப்பிட்டுள்ள புகார் மீதான விசாரணை கடந்த 18.02.2023 ஆம் தேதி அன்று காவல் நிலையத்தில் நடந்தபோது அங்கே நான் எனது கணவருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என எழுதிக் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் நிலக்கோட்டை காவல் நிலையத்திலும், ஒட்டன்சத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திலும் அளித்த புகார்களை குடும்ப தகராறு என்று முடித்து வைத்தார்கள் என்றால் சரிதான். கடந்த 09.05.2026 ஆம் தேதி அன்று எங்களுக்குள் நடந்த மீடியேசனில் தனி வீடு எடுத்து வைத்தால் கணவருடன் சேர்ந்து வாழ தயார் என்று சொன்னேன் என்றால் சரிதான்.

2) நான் சார்பு நீதிமன்றத்தில் சேர்ந்து வாழ்வதற்காக தாக்கல் செய்த மனுவிலும், இந்த மனுவிலும் தனி வீடு எடுத்து வைத்தால் எதிர்மனுதாரருடன் வாழ்கிறேன் என்ற சங்கதியை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. கடந்த 16.08.2022 ஆம் தேதி அன்று நிலகோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரருக்கு எதிராக புகார் ஒன்றை அளித்தேன் என்றால் சரிதான். மேற்படி புகாரில் எனது பெற்றோர் எனக்கு 8 பவுன் தங்க நகையும், எனது கணவருக்கு 1 பவுன் தங்க நகையும், கட்டில், பீரோ மற்றும் சீர்வரிசை பாத்திரங்கள் கொடுத்தார்கள் என்றால் சரிதான். அப்போது எனது கணவரிடம் அவ்வளவு நகைதான் இருந்தது அதனால் அப்படி குறிப்பிட்டுள்ளேன். **மேற்படி புகார் மனு எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3) நான் தற்போது என்ன வேலை செய்கிறேன் என்றால் வீட்டில் தான் உள்ளேன். கடந்த முறை நீதிமன்றத்தில் ஆஜராகும்போது என் தரப்பில் நான் என்.பி. மருத்துவமனையில் வேலை செய்வதால் ரூ.1000– காஸ்ட் பெற்று தரவேண்டும் என்று

சொன்னேன் என்றால் சரிதான். தற்போது நான் வேலைக்கு செல்வதில்லை. என்.பி. மருத்துவமனையில் இருந்து நானாக வேலையைவிட்டு நின்றேனா அல்லது நிறுத்தப்பட்டேனா என்றால் நானாகத்தான் வேலையை விட்டுவிட்டேன். என்.பி. மருத்துவமனையானது பெயர் பெற்ற மருத்துவமனை என்றால் சரிதான். அங்கே அனுபவமிக்க பணியாளர்களை மட்டும் தான் பணி அமர்த்துவார்கள் என்றால் சரியல்ல. என்.பி. மருத்துவமனையில் எவ்வளவு காலமாக வேலை பார்த்தேன் என்றால் ஒரு மாத காலம். என்னுடைய பணி இயல்பு என்ன என்றால் அலுவலகத்தை பார்த்து கொண்டேன்.

4) எதிர்மனுதாரர் எனக்கும், எனது குழந்தைக்கும் மருத்துவ காப்பீட்டு திட்டம் ஒன்றை United India Insurance –ல் செலுத்தி வருகிறார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளவர் நான் தான் என்றால் சரிதான். என்னுடன் இருப்பவர் யார் என்றால் எனது பெரியப்பா மகனான சதீஸ்குமார். **மேற்படி புகைப்படமானது எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.07.15 18:05:06 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 15/ 07/2026